THE HINDU

14 NOV 2022

PAGE 6

# Nov. 15 deadline to apply for distance learning courses

The Directorate of Distance Education (DDE), Pondicherry University, has set November 15 as the last date for submission of online applications to various courses. A university press note said the admission process, that usually commences in July for the academic year, was delayed this year due to the COVID-19 pandemic. All interested candidates can visit https://dde.pondiuni.edu.in to apply. For clarifications, call the helpline 0413-2654439, the press note said. The DDE is offering 20 degree programmes, which include eight MBA degrees, four PG degrees and eight UG degrees. These degree programmes are recognised and approved by the AICTE, New Delhi, and the Distance Education Bureau, New Delhi, the press note said.

DINA THANTHI

14 NOV 2022

PAGE 13

பல்கலைக்கழக தொலைதூரக்கல்வி:

# 20 படிப்புகளுக்கு விண்ணப்பிக்க நாளை கடைசி நாள்

புதுச்சேரி, நவ.14-

புதுச்சேரி பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் தொலைதூரக்கல்வி இயக்குனரகத்தால் 20 பட்ட படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் 8 எம்.பி.ஏ. மேலாண்மை படிப்புகள் உள்ளன. மார்க்கெட்டிங், நிதி, மனித வள மேலாண்மை, சர்வதேச வணிகம், பொது, சுற்றுலா, செயல்பாடுகள் மற்றும் வினியோக சங்கிலி, மேலாண்மை மற்றும் மருத்துவ மேலாண்மை ஆகியவை அடங்கும். மேலும் 4 முதுநிலை படிப்புகளும், 8 இளநிலை படிப்புகளும் அடங்கும். இந்த படிப்புகள் ஏ.ஐ.சி.டி.இ. புது டெல்லி மற்றும் தொலைதூரக்கல்வி பணியகம் ஆகியவற்றால் அங்கிகரிக்கப்பட்டது.

இதற்காக ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகிறது. விண்ணப்பிக்க நாளை (செவ்வாய்க்கிழமை) கடைசி நாள் ஆகும். இதுதொடர்பான மேலும் தகவலுக்கு விண்ணப்பதாரர்கள் *https://dde.pondiuni.edu.in* என்ற இணையதளத்தை பார்வையிடலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DINAMALAR

14 NOV 2022

PAGE 1

# பல்கலை தொலைதுார கல்வி இயக்குனரகம் ஆன்லைன் விண்ணப்பம் நாளையுடன் முடிவு

**புதுச்சேரி, நவ. 14–**

புதுச்சேரி பல்கலைக்கழகம் தொலைதுார கல்வி இயக்குனரகத்தில், பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கை ஆன்லைன் விண்ணப்ப தேதி நாளையுடன் முடிவடைகிறது.

புதுச்சேரி பல்கலைக்கழகம், தொலைதுார கல்வி இயக்குனரக செய்திக்குறிப்பு;

புதுச்சேரி பல்கலைக்கழகம், தொலைதுார கல்வி இயக்குனரகம் மூலம் 20 பட்டப்படிப்புகள் வழங்கப்படுகிறது. சந்தைபடுத்துதல், நிதி, மனிதவள மேலாண்மை, சர்வதேச வணிகம், பொது, சுற்றுலா, செயல்பாடுகள் மற்றும் விநியோக சங்கிலி, மேலாண்மை மற்றும் மருத்துவமனை மேலாண்மை ஆகிய 8 எம்.பி.ஏ., படிப்புகள் உள்ளது. எம்.ஏ., (ஆங்கிலம்), ஹிந்தி, சமூகவியல், எம்.காம்., (நிதி) ஆகிய முதுகலை படிப்புகள்; பி.பி.ஏ., பி.காம்., பி.ஏ., ஆங்கிலம், பொருளாதாரம், வரலாறு, அரசியல் அறிவியல், சமூகவியல் மற்றும் பத்திரிக்கை வெகுஜன தொடர்பு ஆகிய இளங்கலை பட்டப்படிப்புகள் உள்ளன.

இப்படிப்புகள் ஏ.ஐ.சி.டி.இ., புதுடில்லி மற்றும் தொலைதுார கல்வி பணியகம் ஆகியன மூலம் அங்கீகரிக்கப்படுகிறது. கல்வியாண்டு சேர்க்கை செயல்முறை ஜூலையில் துவங்கும். கோவிட் காரணமாக, இந்தாண்டு தாமதமானது.

ஆன்லைன் விண்ணப்பங்களுக்கான இறுதி நாள் நாளை (15ம் தேதி) ஆகும். ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் https://dde.pondiuni.edu.in என்ற இணையதளத்தை காணலாம். இது பற்றி விபரம் தேவைப்படுவோர், புதுச்சேரி பல்கலைக்கழகம் தொலைதுார கல்வி இயக்குனரகம் உதவி மையம் 0413 2654439 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

DINAKARAN

14 NOV 2022

PAGE 14

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# தொலைதூர கல்விக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்க நவ.15ம் தேதி கடைசி நாள்

புதுச்சேரி, நவ. 14: புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு பிரிவு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் தொலைதூர கல்வி இயக்குநரகத்தால் (டிடிஇ) மொத்தம் 20 பட்டப்படிப்புகள் வழங்கப் பட்டு வருகிறது. இதில் எம்பிஏ சந்தைப்படுத்தல், நிதி, மனிதவள மேலாண்மை, சர்வதேச வணிகம், பொது, சுற்றுலா, செயல்பாடுகள் மற்றும் விநியோக சங்கிலி மேலாண்மை, மருத்துவமனை மேலாண்மை என 8 முதுகலை மேலாண்மை படிப்புகளும், எம்ஏ ஆங்கிலம், இந்தி, சமூகவியல், எம்.காம் (நிதி) என 8 முதுநிலை பட்டப்படிப்புகளும், பிபிஏ, பி.காம், பிஏ ஆங்கிலம், பொருளாதாரம், வரலாறு, அரசியல் அறிவியல், சமூகவியல் மற்றும் பத்திரிகை & வெகுஜன தொடர்பு என 8 இளநிலை பட்டப்படிப்புகளும் அடங்கும். இந்த பட்டப்படிப்புகள் டெல்லி அகில இந்திய தொழில்நுட்ப கல்விக்கழகம் மற்றும் தொலைதூர கல்வி பணியகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

பொதுவாக கல்வியாண்டிற்கான சேர்க்கை செயல்முறை ஜூலையில் தொடங்கும். கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக இந்தாண்டு தாமதமாகிறது. மேலும் ஆன்லைன் விண்ணப்பங்களுக்கான கடைசி நாள் நவம்பர் 15ம் தேதி ஆகும். ஆர்வமுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களும் *https://dde.pondiuni.edu.in* என்ற இணையதளத்தை பார்வையிடலாம். ஏதேனும் விளக்கங்களுக்கு உதவி மையத்தை *0413-2654439* என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.